








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 01.11.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- பொருளாதார நிகழ்வுகள்












## இந்திய நிகழ்வுகள்

- **ஒடிய மொழி** மற்றும் இலக்கியங்களை ஊக்குவிப்பதற்காக புதிய தளமான **‘ஒடியா மெய்நிகர் நிறுவனம்’** என்ற தளத்தை ஒடிஷாவின் முதல்வர் தொடங்கி வைத்தார்.
  - இந்த தளமானது, **(www.Ova.gov.in)** மாநில அரசால் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் ஒடிய மென்பொருள் உருவாக்கத்திற்காக பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

- தெற்காசிய மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் மீது டிஜிட்டல் தொலைத் தொடர்புகளில் ஆய்வு செய்வதற்கான, **2-வது இந்திய கைப்பேசி மாநாடு (2nd Indian mobile Congress)** புதுடெல்லியில் உள்ள ஏரோசிட்டி நகரில் நடைபெற்றது.
  - 2018-ஆண்டிற்கான கருத்துரு **(Theme) :- ”புதிய டிஜிட்டல் வரைகோடுகள் இணைத்து உருவாக்கி, புதுமைப்படுத்து” (New Digital Horizons Connect Create Innovate) என்பதாகும்.**

- மத்திய உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைத் துறை அமைச்சர் திருமதி ஹரசிம்ரத் கௌர் பாதல் குஜராத்தின் சூரத்தில், அம்மாநிலத்தின் **முதல் மெகா பூங்காவான (1st Mega Food Park in Gujarat)** குஜராத் அக்ரோ மெகா உணவுப் பூங்காவை தொடங்கி வைத்துள்ளார்.

## உலக நிகழ்வுகள்

- ஐக்கிய அரபு அமீரகத்தால் **(UAE – United Arab Emirates)** உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட **கலிஃபாசாட் புவி கண்காணிப்பு செயற்கைக் கோளை ஜப்பானின் ராக்கெட்டான H-2A** விண்வெளி சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தியது.
  - மேலும் **H-2A ராக்கெட்டானது**, ஜப்பானின் பசுமை இல்ல வாயுக்கள் கண்காணிப்பு செயற்கை கோளான இபுகி-2 என்ற செயற்கை கோளையும் சுமந்து சென்றன.

- பருவநிலை மாற்றத்தைக் கண்காணித்து, அதனால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக, பிரான்ஸின் உதவியுடன் சீன விண்வெளி ஆய்வு அமைப்பு முதல் முறையாக உருவாக்கியுள்ள

செயற்கைகோளை, **சீனாவின் "Long March -2C"** என்ற ராக்கெட் மூலம், கோபி பாலைவனத்திலுள்ள ஜியூகான் ஏவுதளத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **டென்மார்க்கின் ஓடென்சில்** நடைபெற்ற டென்மார்க் ஓபன் போட்டியில் பஞ்சாப்பைச் சேர்ந்த சர்வதேச பாரா பூப்பந்தாட்ட வீரரான **சஞ்சீவ் குமார் 2 தங்கப்பதக்கங்கள்** மற்றும் வெண்கலப் பதக்கம் ஆகியவற்றை வென்றுள்ளார்.
  - இவர் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் லூகா ஒல்கியாடி என்பவரை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- தென் ஆப்பிரிக்காவின் கேப் டவுன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மனித சிறுநீரிலிருந்து உருவான உலகின் முதல் உயிரி செங்கல்லை உருவாக்கியுள்ளனர். இந்த செங்கல்லானது **"நுண்ணுயிர் கார்பனேட் வீழ்படிவாக்கல்"** முறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.
  - இந்தக் கண்டுபிடிப்பு, கழிவுகளை மறுசுழற்சி மற்றும் உட்சுழற்சி செய்வதற்கான புதிய முயற்சியாகும்.

## விருதுகள்

- 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான கலாச்சார நல்லிணக்கத்திற்கான தாகூர் விருதுகளை மத்திய அரசின் கலாச்சார அமைச்சகம் அறிவித்துள்ளது.
  - 2014-ம் ஆண்டுக்கான தாகூர் விருது – **ராஜ்குமார் சிங்ஹாஜித் சிங்**
  - 2015-ம் ஆண்டுக்கான தாகூர் விருது – **சயனௌத்**
  - 2016-ம் ஆண்டுக்கான தாகூர் விருது – **ராம் வஞ்சி சுடர்**
- **குறிப்பு :**
  - குருதேவ் **இரவீந்திரநாத் தாகூரின் 150-வது** பிறந்த நாள்

கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக 2011 ஆம் ஆண்டு இந்திய அரசால் இவ்விருது உருவாக்கப்பட்டது.

## பொருளாதார நிகழ்வுகள்

- உலக வங்கி வெளியிட்டுள்ள, 2018-ஆம் ஆண்டிற்கான எளிதில் தொழில் தொடங்க தகுந்த நாடுகளின் **(Easy doing Business)** பட்டியலில், மொத்தம் **190 நாடுகளில் இந்தியாவானது 77-வது** இடம் பிடித்துள்ளது.
  - மேலும் தெற்காசியாவிலேயே தொழில் தொடங்குவதற்கு எளிதான சூழல் உள்ள நாடுகளில் முதலிடத்தையும் இந்தியா பிடித்துள்ளது.
- **குறிப்பு :**
  - 2017-ஆம் ஆண்டில் எளிதில் தொழில் தொடங்க உகந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா 100-வது இடம் பிடித்திருந்தது குறிப்பிடத் தக்கது.

We Shine Academy TM